பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 13

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 20

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 27

முன்னுரை 33

இஸ்லாமியக் கல்வியின் சிறப்பு 34

1. அல்லாஹ்வின் அருட்கொடை 34
2. நற்செயல்களின் நுழைவாயில் 34
3. அதிகம் பிரார்த்திக்க வேண்டிய அருள் 34
4. இஸ்லாமிய அறிவின்றி இஸ்லாமிய வாழ்வில்லை 35

இஸ்லாமிய அறிவின் தேவையும் தேடலும் 38

1. இஸ்லாமியக் கல்வியின் மூலங்கள் 38
2. செயல்பாடு சீராக அறிவு தேவை 38
3. கற்றதின்படிச் செயல்படுதல் கடமை 39
4. இஸ்லாமிய அறிவுக்காக நேரம் ஒதுக்குதல் அவசியம் 39
5. இந்நூல் உங்களுக்கு உதவும் 40

பிரிவு 1: தூய்மை 43

1 தூய்மையும் தண்ணீரும் 45

தொழுகையின் முக்கியத்துவம் 45

1. தொழுகையின்றி இஸ்லாம் இல்லை 45
2. தொழுகையும் திருக்குர்ஆனும் 45
3. தொழுகையும் நபியவர்களும் 45
4. தொழுகையும் நல்லோர்களும் 46

தூய்மையின் முக்கியத்துவம் 46

1. தூய்மையின்றித் தொழுகை இல்லை 46
2. தூய்மை - இஸ்லாமிய வரைவிலக்கணம் 46

3. தூய்மையான தண்ணீர் 47
4. தண்ணீர் நிறம் மாறுதல் 47
5. தண்ணீர் இல்லாதபோது தூய்மை செய்தல் 49
6. தண்ணீர் இரண்டு வகை 50

2 இறைமறுப்பாளர்களின் பாத்திரங்களும் ஆடைகளும் 51
1. தங்கம், வெள்ளிப் பாத்திரங்கள் 51
2. செத்துப்போன கால்நடைகளின் தோல்கள் 52

3 அசுத்தமாக இருப்பவருக்குத் தடுக்கப்பட்ட செயல்கள் 54
- சிறு அல்லது பெருந்துடக்குடன் இருப்பவருக்குத் தடுக்கப்பட்டவை 54
- பெருந்துடக்குடன் இருப்பவர்மீது மட்டும் குறிப்பாகத் தடுக்கப்பட்டவை 57

4 மலம், சிறுநீர் கழிப்பதின் ஒழுக்கங்கள் 60

5 பல் துலக்குதலும் இயற்கைக் கடமைகளும் 65
- இயற்கைக் கடமைகள் 67

6 வுளூ 70
- வுளூவின் கல்வியில் மூன்று பகுதிகள் 70
1. வுளூவின் நிபந்தனைகள் 71
2. வுளூவின் கடமைகள் 71
3. வுளூவில் உபரியான நபிவழிகள் 75

7 வுளூவின் வழிமுறை 77
- வுளூவின் வழிமுறை 77
- முழுமையாகக் கழுவுதல் முக்கியம் 79
- தண்ணீர் விரயம் கூடாது 81
- வரம்புமீறலும் வெறுமையும் பழிப்பிற்குரியவை 82

8 காலுறைகள் அல்லது அது போன்ற தடுப்புகளில் மஸ்ஹ் செய்தல் 84
- காலுறைகள்மீது மஸ்ஹ் செய்வதின் சட்டம் 85
- மஸ்ஹ் செய்வதற்கான நிபந்தனைகள் 86

- தலைப்பாகையின்மீது மஸ்ஹ் 87
- மஸ்ஹ் செய்யும் இடம் 89
- காலுறைகளின்மீது மஸ்ஹ் செய்யும் முறை 89

9 வுளூவை முறிக்கக்கூடியவை 90
- வுளூவை முறிக்கும் இரண்டு காரணிகள் 90
- வுளூவை முறிக்கும் காரியங்கள் 91

10 குளிப்பு 95
- குளிப்புக் கடமையாகும் ஆறு காரணங்கள் 95
- குளிக்கும் முறை 97

11 தயம்மும் 100
- தயம்மும் – அல்லாஹ்வின் உபகாரம் 101
- தயம்மும் செய்ய தகுதியான நிலைகள் 102
- தயம்மும் செய்யும் முறை 103
- தயம்முமை முறிக்கக்கூடியவை 104

12 அசுத்தத்தை அகற்றுதல் 106
- கட்டாயம் அகற்றப்பட வேண்டிய அசுத்தங்கள் 107
- அசுத்தங்கள் மூன்று வகை 108

13 மாதவிடாயும் பிரசவத்தீட்டும் 112

1. மாதவிடாய் சட்டங்கள் 112
- குர்ஆன் ஸுன்னா கூறும் மாதவிடாய் சட்டங்கள் 113

2. இஸ்திஹாலாவும் அதனுடைய சட்டங்களும் 116
- முஸ்தஹாலா பெண்கள் செய்ய வேண்டியவை 119

3. பிரசவத்தீட்டு சட்டங்கள் 120

பிரிவு 2: தொழுகை 123

1 ஐந்து வேளை தொழுகை கடமையாகுதல் 125

2 அதான் மற்றும் இகாமத் 130
- அதான் கூறக்கூடியவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் 131

3 தொழுகைக்கான நிபந்தனைகள் 134
- முதல் நிபந்தனை: அதனுடைய நேரம் 134
- தொழுகைக்கான நேரங்கள் 136
- இரண்டாவது நிபந்தனை: மறைவிடங்களை மறைத்தல் 139
- மூன்றாவது நிபந்தனை: அசுத்தங்களை விட்டு தவிர்ந்துகொள்ளுதல் 144
- நான்காவது நிபந்தனை: கிப்லாவை முன்னோக்குதல் 148
- கிப்லாவை அறிவிக்கும் விசயங்கள்: 150
- ஐந்தாவது நிபந்தனை: நிய்யத் (எண்ணம்) 150

4 தொழுகைக்காக நடந்து செல்வதின் ஒழுக்கங்கள் 153

5 தொழுகையின் தூண்கள், கடமைகள், ஸுன்னத்துகள் 158
1. தொழுகையின் அர்கான் – தூண்கள் பதினான்கு 159
2. தொழுகையின் வாஜிபாத் – கடமைகள் 164
3. தொழுகையின் ஸுன்னத்துகள் 166
1. சொற்கள்: 166
2. செயல்கள்: 167

6 தொழுகை முறை 169

7 தொழுகையில் விரும்பத்தகாத காரியங்கள் 174

8 தொழுகையில் அனுமதிக்கப்பட்ட செயல்கள் 179

9 மறதிக்கான ஸுஜூது 183

10 தொழுகைக்குப் பிறகு ஓத வேண்டிய திக்ர்கள் 187

11 உபரியான தொழுகை 197
- இருவகையான உபரித் தொழுகைகள் 198

12 வித்ர் தொழுகை சட்டங்கள் 199

13 தராவீஹ் தொழுகை சட்டங்கள் 203

14 ஃபர்ளு தொழுகைகளுடன் இணைந்த ஸுன்னத் தொழுகைகள் 207

15 லுஹா தொழுகை 213

16 திலாவத் (குர்ஆன் ஓதுதல்) உடைய ஸுஜூது 215

17 பொதுவான உபரி வணக்கங்கள் 219

18 தொழக்கூடாத நேரங்கள் 225

19 ஜமாஅத்தாகத் தொழுதல் கடமை மற்றும் அதன் சிறப்புகள் 228

- ஜமாஅத் தொழுகையைவிட்டுப் பின்தங்கியவரின் சட்டம் 232

20 ரக்அத்துகளை விட்டுப் பின்தங்கியவரின் சட்டங்கள் 242

21 பெண்கள் மஸ்ஜிதுகளுக்கு வருவதைப் பற்றிய சட்டங்கள் 248

22 இமாமத்திற்குரிய சட்டங்கள் 253

23 தொழுகையில் இமாமத் செய்வதற்கு தகுதியில்லாதவர்கள் 258

24 தொழுகையில் இமாமின் மீதுள்ள கடமைகள் 265

25 நோயாளிகள், பயணிகள், அச்சநிலையில் உள்ளவர்களின் தொழுகை 270

1. நோயாளியின் தொழுகை 271
2. வாகனத்தின்மீது அமர்ந்திருப்பவரின் தொழுகை 274
3. பயணியின் தொழுகை 275
4. அச்ச நேரத் தொழுகை 279

26 ஜுமுஆ தொழுகை சட்டங்கள் 287

- ஜுமுஆ தொழுகை சரியாக அமைவதற்கான நிபந்தனைகள் 299

27 இரண்டு பெருநாள் தொழுகை 305

28 கிரகணத் தொழுகை 323

- கிரகணத் தொழுகை தொழும் முறை 326

29 மழை வேண்டித் தொழுகை 329

30 ஜனாஸா உடைய சட்டங்கள் 334

1. நோயாளி மற்றும் மரணத் தருவாயில் இருப்பவருக்குரிய சட்டங்கள் 336
2. இறப்பின் சட்டங்கள் 340
3. மய்யித்தைக் குளிப்பாட்டுதல் 342
4. கஃபன் அணிவிப்பதின் சட்டங்கள் 349
5. மய்யித் தொழுகையின் சட்டங்கள் 350

- மய்யித் தொழுகைக்கான நிபந்தனைகள் 351
- அதன் அர்கான் (தூண்கள்) 351
- அதனுடைய ஸுன்னத்துகள் 351
- மய்யித் தொழுகை முறை 352

6. மய்யித்தை தூக்கிச் செல்லுதல் மற்றும் அதனை அடக்கம் செய்தல் 355
7. ஆறுதல் கூறுதல் மற்றம் கப்ருகளை ஸியாறத் செய்வதைப் பற்றிய சட்டங்கள் 360

பிரிவு 3: ஸகாத் 365

1 ஸகாத் கடமையும் சிறப்புகளும் **367**

- ஸகாத்தைக் கடமையாக்கும் ஐந்து நிபந்தனைகள் 370

2 கால்நடைகளில் ஸகாத் **374**

1. ஒட்டகத்தினுடைய ஸகாத் 374
2. மாடுகளில் ஸகாத் 375
3. ஆடுகளில் ஸகாத் 376

3 பயிர்கள், விளைச்சல்கள், தேன், கனிமப்பொருள்கள், புதையல்கள் ஆகியவற்றில் ஸகாத் **382**

- பழங்கள்மீது ஸகாத் கடமை 383
- ஸகாத் கடமையாகும் நேரம் 384
- கனிமப் பொருள்களில் ஸகாத் 385

4 நாணயங்களில் ஸகாத் **387**

- தங்கம் மற்றும் வெள்ளியில் ஆண்கள் அணிவதற்கு அனுமதிக்கப்பட்டவை 388
- தங்கம் மற்றும் வெள்ளியில் பெண்கள் அணிவதற்கு அனுமதிக்கப்பட்டவை 389
- தங்கம், வெள்ளி முலாம் பூசுதல், அவற்றின் மூலம் பாத்திரங்கள் செய்தல் பற்றிய சட்டம் 390

5 வியாபாரப் பொருள்களில் ஸகாத் **392**

- வியாபாரப் பொருள்களில் ஸகாத் கடமையாவதற்கான நிபந்தனைகள் 393
- வியாபாரப் பொருள்களில் ஸகாத் வழங்கும் முறை 393

6 ஃபித்ரா உடைய ஸகாத் 396

7 ஸகாத் கொடுத்தல் 401

8 ஸகாத் பெறத் தகுதியுடையவர்கள் 405

9 விரும்பத்தக்க ஸதகா 413

பிரிவு 4: நோன்பு 419

1 றமளான் நோன்பின் கடமையும் அதன் நேரமும் 421

2 நோன்பு நாளின் தொடக்கம் மற்றும் முடிவு 427

3 நோன்பை முறிக்கக்கூடியவை 433

4 நோன்பிற்கான களா சட்டங்கள் 438

5 முதுமை அல்லது நோயின் காரணமாக நோன்பை விட்டவர் செய்ய வேண்டியவை 442

பிரிவு 5: ஹஜ்ஜு 447

1 எவர்கள்மீது ஹஜ்ஜு கடமை? 449

ஹஜ்ஜு உடைய நிபந்தனைகள் ஐந்து 453

2 பெண்கள்மீது ஹஜ்ஜு கடமையாவதற்கான நிபந்தனைகள் மற்றும் ஒருவர் சார்பாக ஹஜ்ஜு செல்லுதல் 456

3 ஹஜ்ஜுக்காகத் தயாராகுவதின் சிறப்பு 460

4 ஹஜ்ஜுடைய மீகாத்துகள் 462

5 இஹ்றாம் அணியும் முறை 467

6 இஹ்றாம் உடைய நிலையில் தடை செய்யப்பட்டவை 471

7 தர்விய்யா மற்றும் அறஃபா உடைய நாளில் செய்ய வேண்டிய வழிபாடுகள் 482

8 முஸ்தலிஃபாவை நோக்கி செல்லுதல், அங்கு இரவு தங்குதல், மேலும் முஸ்தலிஃபாவிலிருந்து மினாவை நோக்கி செல்லுதல் மற்றும் ஈதுடைய நாளில் செய்ய வேண்டிய வழிபாடுகள் 488

- கஅபத்துல்லாஹ்வை தவாஃப் செய்யும் முறை 497
- தவாஃப் ஏற்கப்பட 13 நிபந்தனைகள் 497
- சயீ சரியாவதற்கான நிபந்தனைகள் 499

9 அய்யாமுத் தஷ்ரீக் மற்றும் தவாஃபுல் விதாவில் செய்யப்படக்கூடிய ஹஜ்ஜுடைய சட்டங்கள் 500

10 பலிப்பிராணிகளின் சட்டங்கள் 506
11 அகீகா உடைய சட்டங்கள் 510

இஸ்லாமியக் கல்வியின் சிறப்பு

1. அல்லாஹ்வின் அருட்கொடை

இஸ்லாமியக் கல்வியைப் பெற்றுக்கொள்வதுதான் செயல்கள் அனைத்திலும் மிகச் சிறந்த செயலாகும். அல்லாஹ்விடமிருந்து ஒருவர் நன்மையை அடைந்துகொண்டிருக்கிறார் என்பதின் அடையாளமும் அதுவே. அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

مَنْ يُرِدِ اللهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவருக்கு இஸ்லாமியச் சமயத்தைச் சரியாகப் புரிந்துகொள்கின்ற நுட்பமான அறிவைக் கொடுக்கிறான். (அறிவிப்பு: முஆவியா ؓ, புகாரீ 71, முஸ்லிம் 1037)

2. நற்செயல்களின் நுழைவாயில்

இதற்குக் காரணம் இஸ்லாமியச் சமயம் குறித்த அறிவின் மூலமாகத் தான் நற்செயல்களைச் செய்யத் தூண்டுகின்ற பயனுள்ள கல்வி பெறப்படுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

هُوَ الَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِالْهُدَى وَدِينِ الْحَقِّ

அவனே தன்னுடைய தூதரை நேர்வழியைக்கொண்டும் உண்மை யும் சத்தியமும் நிறைந்த மதத்தைக்கொண்டும் அனுப்பி வைத் தான். (குர்ஆன் 48:28)

இங்கு அல்-ஹுதா (நேர்வழி) என்று கூறப்படுவது பயனுள்ள கல்வியைக் குறிக்கும். தீனுல் ஹக்கு (உண்மையும் சத்தியமும் நிறைந்த மதம்) என்பது நற்செயல்களைக் குறிப்பிடும்.

3. அதிகம் பிரார்த்திக்க வேண்டிய அருள்

அல்லாஹ் தனது நபியிடம் இஸ்லாமிய அறிவை அதிகம் வேண்டிப் பிரார்த்தனை செய்யுமாறு கட்டளையிடுகிறான்.

இஸ்லாமிய அறிவின் தேவையும் தேடலும்

✿

1. இஸ்லாமியக் கல்வியின் மூலங்கள்

கண்ணியமிக்க வாசகர்களே, பயனுள்ள கல்வி திருக்குர்ஆன் மற்றும் நபிவழியிலிருந்தே பெறப்படுகிறது. நன்மையை நாடக்கூடிய ஆசிரியர்களின் உதவியோடும், தஃப்சீர் எனப்படுகிற குர்ஆன் விரிவுரைகள், ஹதீஸ் எனப்படுகிற நபிமொழி விளக்கங்கள், ஃபிக்ஹ் எனும் இஸ்லாமியச் சட்டவியல் புத்தகங்கள், இலக்கணப் புத்தகங்கள் மற்றும் குர்ஆன் இறங்கிய மொழியான அறபுமொழியின் துணையோடும்தான் இந்தக் கல்வி கற்கப்படுகிறது. நிச்சயமாக இந்தப் புத்தகங்கள் குர்ஆனையும் நபிவழியையும் புரிந்து கொள்வதற்கான வழியாகும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

2. செயல்பாடு சீராக அறிவு தேவை

என்னுடைய முஸ்லிம் சகோதர சகோதரிகளே, உங்களுடைய செயல்பாடு சரியாக இருக்க வேண்டியது உங்களுக்குக் கட்டாயமான விசயமாகும். நீங்கள் உங்கள் வழிபாடுகளைச் சரிசெய்யக் கூடிய (தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்ஜு) விசயங்களை முதலில் கற்க வேண்டும். இவ்வாறே உங்களுக்குத் தேவைப்படும் நடைமுறை வாழ்க்கையின் சட்டங்களையும் கற்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு ஆகுமாக்கியதை எடுத்துக்கொள்வதற்கும், தடைவிதித்ததை விட்டுவிடுவதற்கும் இதுவே உங்களுக்கு அவசியம். அப்போதுதான் உங்கள் சம்பாத்தியம் ஹலால் ஆனதாக, உங்கள் உணவு தூய்மையானதாக அமையும். இதனால் உங்களுடைய பிரார்த்தனையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவை அனைத்தும் இஸ்லாமியக் கல்வியைக் கற்பதை உங்களுக்கு அவசியமாக்குகிறது. உங்கள் எண்ணம் சரியானால், உங்கள் உறுதி உண்மையானால், அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இது உங்களுக்கு இலகுவானதாக அமைந்துவிடும்.எனவே, பயனுள்ள புத்தகங்களைப் படிப்பதற்கு ஆர்வம் காட்டுங்கள். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும், சட்டங்களைக்

1

தூய்மையும் தண்ணீரும்



தொழுகையின் முக்கியத்துவம்

1. தொழுகையின்றி இஸ்லாம் இல்லை

நிச்சயமாக தொழுகை இஸ்லாமை நிலைநிறுத்தும் தூண்களில் ஷஹாதா எனும் ஓரிறைக் கொள்கையின் உறுதிமொழிக்குப் பிறகு இரண்டாவது தூணாகும். இதுதான் இஸ்லாமை ஏற்றுக் கொண்ட முஸ்லிமையும் அதன் வழிகாட்டலை மறுத்துவிட்ட நிராகரிப்பாளரையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. இதுதான் இஸ்லாமின் அடிப்படைத் தூண். முதன்முதலில் அடியான் இது குறித்துதான் விசாரிக்கப்படுவான். இதில் அவன் சரியாக இருந்திருந்தால் எல்லா நற்செயல்களும் அல்லாஹ்விடம் ஏற்கப்பட்டு நற்கூலி வழங்கப்படும். இதில் அவன் சரியில்லை என்றால், அனைத்து நற்செயல்களும் மறுக்கப்பட்டுவிடும்.

2. தொழுகையும் திருக்குர்ஆனும்

குர்ஆனின் பல இடங்களில் வெவ்வேறு தன்மைகளில் தொழுகையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலசமயங்களில் அதனை நிலைநாட்டும்படி அல்லாஹ் கட்டளையிடுகிறான். சிலசமயங்களில் அதனுடைய சிறப்புகள் குறித்துக் கூறுகிறான். சிலசமயங்களில் அதனுடைய பலனைக் குறிப்பிடுகின்றான். சிலசமயங்களில் பொறுமையோடு அதனை இணைத்து அதன் மூலம் கஷ்டமான காலங்களில் உதவிதேடுமாறு கட்டளையிடுகிறான்.

3. தொழுகையும் நபியவர்களும்

இவ்வுலகில் நபி ﷺ அவர்களின் கண்குளிர்ச்சி, அதாவது நிம்மதியும் மகிழ்ச்சியும், தொழுகையாகத்தான் இருந்தது. இது நபிமார்களின் ஆபரணமாகும்; நல்லோர்களின் அடையாளமாகும்.

7

வுளூவின் வழிமுறை



வுளூவின் நிபந்தனைகள், கடமைகள், ஸுன்னத்துகள் ஆகிய மூன்றையும் நீங்கள் அறிந்தால் இவையே வுளூவைச் செயல் படுத்துகின்ற வழிமுறை என்பதையும் அறிந்துகொண்டவர்கள் ஆவீர்கள். வுளூவின் வழிமுறை என்பது இஸ்லாமிய மூல ஆதாரங் களிலிருந்து எடுக்கப்பட்ட கடமைகளையும் ஸுன்னத்துகளையும் உள்ளடக்கியது.

வுளூவின் வழிமுறை

1. வுளூ செய்கிறேன் என்ற எண்ணத்தோடு தொடங்க வேண்டும்.
2. பிஸ்மில்லாஹ் கூறிக்கொள்ள வேண்டும்.
3. இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.
4. மூன்று முறை வாய் கொப்பளிக்க வேண்டும். மேலும், மூன்று முறை மூக்கில் நீர் செலுத்தி இடது கையைக் கொண்டு சிந்த வேண்டும்.
5. மூன்று முறை முகத்தைக் கழுவ வேண்டும். முழு முகம் என்பது தலைமுடியின் ஆரம்பத்திலிருந்து முகவாய்க்கட்டை வரை. தாடியின் முடியும் முகத்தோடு சேர்ந்ததுதான். எனவே, அதனை யும் கழுவ வேண்டும். அது நீண்டிருந்தாலும் சரியே. தாடி குறைவாக இருந்தால் அதனுடைய உள்புறத்தையும் வெளிப் புறத்தையும் கழுவ வேண்டும். தாடி அடர்த்தியாக இருந்தால் வெளிப்புறத்தை மட்டும் கழுவினால் போதுமானது. முகத்தின் அகலம் ஒரு காதிலிருந்து மற்றொரு காது வரையாகும். இரண்டு காதுகளும் தலையோடு சேர்ந்தவையாகும்.

8

காலுறைகள் அல்லது அது போன்ற தடுப்புகளில் மஸ்ஹ் செய்தல்

✿

நிச்சயமாக நம்மூடைய மதம் இலகுவானது; கடினமானதல்ல. ஒவ்வொரு சூழ்நிலையிலும் பொருத்தமான சட்டங்களை அது நமக்குக் கூறுகிறது. அதன் காரணமாக நோக்கம் நிறைவேற்றப்பட்டு கடினம் போக்கப்படுகிறது.

வுளூ செய்யக்கூடியவரின் உறுப்புகள்மீது தண்ணீர் படாதபடித் தடுப்புகள் இருந்தால் அவற்றைக் கழற்றுவது அவருக்குச் சிரமமாக இருக்கும். அந்தத் தடுப்பு அவருக்கு தேவையாக இருக்கும். காலைப் பாதுகாப்பதற்காக காலில் அணியும் காலுறை, தலையில் அணியும் தலைப்பாகை, காயங்களின்மீது கட்டப்பட்டிருக்கும் கட்டுகள் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவற்றைக் கழற்றாமல் இவற்றின்மீது மஸ்ஹ் செய்வதற்கு இஸ்லாம் அனுமதியளித்துள்ளது. அல்லாஹ் தன் அடியார்கள்மீது இலகுவை ஏற்படுத்துவதற்காகவும், சிரமத்தைப் போக்குவதற்காகவும் இவ்வாறு அனுமதியளித்துள்ளான்.

காலுறைகள்மீது மஸ்ஹ் செய்வது அல்லது அதற்கு மாற்றாக அதனுடைய இடத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய ஜவ்றபீன்மீது மஸ்ஹ் செய்வது ஆதாரப்பூர்வமான, ஏராளமான அறிவிப்பாளர்களின் தொடர் அறிவிப்புகளால் முத்தவாத்திர் எனும் தரத்தை எட்டிய ஹதீஸ்களின் மூலம் நிரூபணமாகியிருக்கிறது. நபியவர்கள் உள்ளூரிலோ பயணத்திலோ இருக்கும்போது இப்படி மஸ்ஹ் செய்பவர்களாக இருந்தார்கள். இதையே பிறருக்கும் கட்டளையிட்டார்கள்.

ஹஸன் அல்-பஸரீ[6] ﷺ கூறுகின்றார்கள்: நபியவர்கள் காலுறைகள்

---

6 ஹஸன் பஸ்ரி: அபூ சயீது ஹஸன் இப்னு அபில்ஹஸன் ஆகிய இவர்கள், உமர் ﷺ ஆட்சிக்காலத்தில் மதீனாவில் ஹிஜ்ரீ 21 (கி.பி. 642)இல் பிறந்தார்கள்.

10

குளிப்பு

✿

இதுவரை சிறு அசுத்தத்திலிருந்து எவ்வாறு தூய்மையடைய வேண்டும் என்பதைப்பற்றி அறிந்துகொண்டீர்கள். இப்போது நீங்கள் பெருந்துடக்கிலிருந்து எவ்வாறு தூய்மையடைய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். பெருந்துடக்கு என்பது குளிப்பு கடமையாகுதல், மாதவிடாய், பிரசவத்தீட்டு என்பதாகும். குளிப்பதின் மூலமாகத்தான் இந்த வகையான அசுத்தங்களிலிருந்து தூய்மையடைய முடியும். குளிப்பு என்பது தண்ணீரைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட முறையில் முழு உடலையும் நனைத்தலாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوا

நீங்கள் குளிப்பு கடமையானவர்களாக இருந்தால் (கை, கால்களை மட்டும் கழுவினால் போதாது. உடல் முழுவதையும் கழுவித் தூய்மையாகிக் கொள்ளுங்கள். (குர்ஆன் 5:6)

பெருந்துடக்கை விட்டு நீங்குவதற்குக் குளித்தல் என்பது இஸ்லாமிற்கு முந்திய காலகட்டத்திலிருந்து வழக்கத்தில் இருக்கும் ஒன்றாகும். இது இப்றாஹீம் ﷺ அவர்களின் மார்க்கத்திலிருந்து கற்றுக் கொண்டதாகும் என்று கூறப்படுகிறது.

குளிப்புக் கடமையாகும் ஆறு காரணங்கள்

ஆறு காரணங்களால் குளிப்புக் கடமையாகின்றது. அவற்றில் ஒன்று ஏற்பட்டுவிட்டாலும் ஒரு முஸ்லிம் குளித்தாக வேண்டும்.

1. **விந்து (المني) வெளியாதல்:** ஆண், பெண் உறுப்புகளிலிருந்து விந்து வெளியேறுதல். தூக்கத்திலோ விழித்திருக்கும் நிலையிலோ விந்து வெளியேறலாம். விழித்திருக்கும் நிலையில் அது வெளியானால் அது வெளியேறும்போது சுகம் உணரப்பட்டால்

30

ஜனாஸா உடைய சட்டங்கள்

✿

நிச்சயமாக நம்முடைய ஷரீஅத் முழுமையானது. மனித வாழ்க்கை மற்றும் அதற்குப் பிறகு தேவையான அனைத்தையும் தழுவியது. அவற்றுள் அல்லாஹ் நமக்கு விதித்துள்ள ஜனாஸாவின் சட்டங்களும், நோய் இறக்கும் தருவாய் மற்றும் மய்யித் நல்ல முறையில் அடக்கம் செய்வதற்கான சட்டங்களும் உள்ளடங்கும். நோயாளியை நலம் விசாரித்தல், அவருக்குக் கலிமா சொல்லிக் கொடுத்தல், அவரைக் குளிப்பாட்டுதல், அவரை அடக்கம் செய்தல், அவருக்காக பிரார்த்தனை செய்தல், மேலும் இதனோடு அவருடைய கடனை அடைத்தல், அவருடைய வஸிய்யத்தை நிறைவேற்றுதல், அவர் விட்டுச் சென்ற சொத்தைப் பங்கிடுதல், அவருடைய சிறிய குழந்தைகளுக்கு பொறுப்பாகுதல் ஆகிய அனைத்தும் ஜனாஸாவின் சட்டங்கள் என்ற தலைப்பினுள் அடங்கும்.

இமாம் இப்னுல் கய்யிம் ﵀ கூறுகின்றார்கள்: ஜனாஸாவுடைய விசயத்தில் நபி ﷺ அவர்களின் வழிகாட்டுதல் முழுமையான வழிகாட்டுதலாகும். மற்ற சமூகங்களின் நடைமுறைக்கு முற்றிலும் முரணானதாகும். அது அனைத்து நிலைகளிலும் அல்லாஹ்வுக்கு அடிபணிவதை நிலைநாட்டுவதின்மீது அமைந்துள்ளது. அது மய்யித்திற்கு நன்மை நாடுதல் கப்ரிலும், மறுமையிலும் பயனளிக்கக் கூடிய விசயங்களைக் கொண்டு அணுகுதலின்மீது அமைந்துள்ளது.

நோயாளியை நலம் விசாரித்தல், கலிமா சொல்லிக் கொடுத்தல், தூய்மைப்படுத்துதல், சிறந்த நிலைகளின்மீது அல்லாஹ்வின்பால் தயார்படுத்துதல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அவர்கள் ஜனாஸாவின் முன்பு வரிசையாக நிற்கிறார்கள். அல்லாஹ்வைப் புகழ்கிறார்கள். நபி ﷺ அவர்கள்மீது ஸலவாத் கூறுகிறார்கள். மய்யித்திற்காக மன்னிப்பையும், அருளையும் வேண்டுகிறார்கள். பின்பு, அவருடைய கப்ரின்மீது நின்று அவருக்காக நிலைகுலை

1

ஸகாத் கடமையும் சிறப்புகளும்



அறிந்துகொள்ளுங்கள். (அல்லாஹ் உங்களுக்கும் எனக்கும் அதற்கான பாக்கியத்தைத் தந்தருள்வானாக.) ஸகாத் உடைய சட்டங்களை, அதனுடைய நிபந்தனைகளை, அது யார்மீது கடமையாக்கப்பட்டுள்ளது, அது எவ்வகையான செல்வத்தில் கடமையாகும் என்பதையும் அறிந்துகொள்வது மிகவும் அவசிய மானதாகும்.

ஸகாத் இஸ்லாமின் அடித்தளங்களில் ஒன்றாகும். குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் மூலமாக இதனைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. அல்லாஹ் தன்னுடைய வேதத்திலே 82 இடங்களில் இதனைத் தொழுகையோடு சேர்த்தே கூறியுள்ளான். இது அத னுடைய சிறப்பையும், தொழுகைக்கும் அதற்கும் உள்ள பரி பூரண இணைப்பையும் எடுத்துக்காட்டுகிறது. எந்த அளவுக் கெனில் இச்சமுதாயத்தின் முதல் கலீஃபா அபூ பக்ர் சித்தீக் ﷺ கூறுகிறார்கள்:

وَاللهِ لأُقَاتِلَنَّ مَنْ فَرَّقَ بَيْنَ الصَّلاَةِ وَالزَّكَاةِ

அல்லாஹ்வின்மீது ஆணையாக, யார் தொழுகையையும் ஸகாத்தையும் வேறுபடுத்திப் பார்ப்பாரோ அவருடன் நான் போரிடுவேன். (அபூ ஹுறைறா ﷺ, புகாரீ 1399, முஸ்லிம் 20)

அல்லாஹ் கூறுகிறான்:

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَارْكَعُوا مَعَ الرَّاكِعِينَ

நீங்கள் தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். தொழுகையில் ஒன்றுசேர்ந்து குனிந்து ருகூஉ செய்பவர்களுடன் நீங்களும் குனிந்து ருகூஉ செய்யுங்கள். (குர்ஆன் 2:43)

6

ஃபித்ரா உடைய ஸகாத்

✿

- ஃபித்ரா உடைய ஸகாத் றமளானில் நிறைவேற்றப்பட வேண்டிய தாகும். இது நோன்பின் இறுதியில் நிறைவேற்றப்பட வேண்டியி ருப்பதால் இதற்கு ஃபித்ர் என்று சொல்லப்படுகிறது.ஃபித்ர் என்றால் 'நோன்பு திறத்தல்' என்று பொருள்.

குர்ஆன், ஸுன்னா மற்றும் இஜ்மாஃ இதற்குச் சான்றாக அமைந் துள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்:

قَدْ أَفْلَحَ مَنْ تَزَكَّى

எவர் (பாவங்களை விட்டு விலகிப்) பரிசுத்தவானாக ஆனாரோ அவர், நிச்சயமாக வெற்றி பெற்றார். (குர்ஆன் 87:14)

ஸலஃபுகள் சிலர் கூறுகிறார்கள்: இந்த வசனத்தில் தூய்மையா குதல் என்பது ஃபித்ரா உடைய ஸகாத் கொடுப்பதைத்தான் குறிக்கும். இந்த வசனத்தின் அடிப்படையில் அது ஸகாத்தாக கருதப்படும்.

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَارْكَعُوا مَعَ الرَّاكِعِينَ

நீங்கள் தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். ருகூஉ செய்பவர்களுடன் நீங்களும் குனிந்து ருகூஉ செய்யுங்கள். (குர்ஆன் 2:43)

இப்னு உமர் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

فَرَضَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الفِطْرِ صَاعًا مِنْ تَمْرٍ، أَوْ صَاعًا مِنْ شَعِيرٍ عَلَى العَبْدِ وَالحُرِّ، وَالذَّكَرِ وَالأُنْثَى، وَالصَّغِيرِ وَالكَبِيرِ مِنَ المُسْلِمِينَ

நபி ﷺ அவர்கள் ஃபித்ரா உடைய ஸகாத்தாக அடிமை, சுதந்திரமா ணவன், ஆண், பெண், பெரியவர், சிறியவர் என முஸ்லிம்களில் அனைவர்மீதும் ஒரு ஸாஉ பேரீச்சம்பழம் அல்லது ஒரு ஸாஉ

1

றமளான் நோன்பின் கடமையும் அதன் நேரமும்

✿

இஸ்லாம் கட்டப்பட்டுள்ள அடித்தளங்களில் றமளான் மாத நோன்பும் அல்லாஹ் கட்டாயமாக்கிய கடமையாகும். குர்ஆன், ஹதீஸ் மற்றும் முஸ்லிம்களின் ஒருமித்த கருத்து ஆகியவை இதனைத் தெளிவாக அறிவிக்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களே! உங்களுக்கு முன்னி ருந்தவர்கள்மீது கடமையாக்கப்பட்டிருந்ததுபோல் உங்கள்மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் அல்லாஹ்வைப் பற்றிய அச்சமுடையவர்களாக ஆகுவீர்கள். *(குர்ஆன் 2:183)*

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيضًا أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ يُرِيدُ اللَّهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ

றமளான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டுகின்ற குர்ஆன் இறக்கப்பட்டது. அது (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடைய தாகவும் இருக்கின்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால், (அக்காலத்தில் உங்களில்) எவரேனும் நோயாளியாகவோ பயணத்திலோ இருந்தால் (றமளான் அல்லாத) மற்ற நாட்களில் (விட்டுப்போன நாட்களின் நோன்பைக்) கணக்கிட்டு (நோற்று)விட வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு

1

எவர்கள்மீது ஹஜ்ஜு கடமை?

✿

இஸ்லாம் கடமையாக்கியுள்ள அடிப்படைத் தூண்களில் ஹஜ்ஜும் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

فِيهِ آيَاتٌ بَيِّنَاتٌ مَقَامُ إِبْرَاهِيمَ وَمَنْ دَخَلَهُ كَانَ آمِنًا وَلِلَّهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا وَمَنْ كَفَرَ فَإِنَّ اللَّهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِينَ

அதில் தெளிவான ஆதாரங்களும் இருக்கின்றன. இப்றாஹீம் தொழுகைக்காக நின்ற மகாமு இப்றாஹீம்[28] என்கிற இடமும் இருக்கின்றது. எவர் அதில் நுழைகின்றாரோ அவர் (பாதுகாப்பு பெற்று) அச்சமற்றவராகி விடுகின்றார். ஆகவே, எவர்கள் அங்கு பயணம் செல்ல ஆற்றல் உடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள்மீது அல்லாஹ்வுக்காக (அங்குச் சென்று) அந்த இறையில்லத்தை ஹஜ்ஜு செய்வது கடமையாகும். எவரேனும் அல்லாஹ்வை(யும் அவனுடைய இக்கட்டளையையும்) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்துவிடுவதில்லை. ஏனென்றால்,) அல்லாஹ் உலகத்தாரின் தேவையற்றவனாகவே இருக்கின்றான். (குர்ஆன் 3:97)

அதாவது, அல்லாஹ்விற்காக ஹஜ்ஜு செய்வது கட்டாயக் கடமையாகும். அதனை விட்டுவிடுபவர் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் காஃபிராவார் என்பதையே இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. அல்லாஹ் தன்னுடைய நண்பருக்குக் கூறுகின்றான்:

28மகாமு இப்றாஹீம்: இப்றாஹீம் ﷺ கஅபாவைக் கட்டும்போது நின்ற இடம் என்று பொருள். அவர் ஒரு பாறாங்கல்லின்மீது நின்றபடிக் கட்டினார்கள். தற்போது அது ஒரு கண்ணாடிக் கூண்டில், கஅபாவுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. அதற்கும் கஅபாவுக்கும் இடையில் உள்ள பகுதியும் மகாமு இப்றாஹீம் எனப்படும். கஅபாவைத் தவாஃப் செய்த பின் முஸ்லிம்கள் இப்பகுதியில் இரண்டு ரக்அத் தொழுவார்கள்.

4

ஹஜ்ஜுடைய மீகாத்துகள்

✿

மீகாத் என்ற அறபி வார்த்தைக்கு எல்லை என்று பொருள்.

ஷரீஅத் அகராதியில் இதற்கு வணக்கத்தினுடைய இடம், வணக்கத் தினுடைய காலம் என்று சொல்லப்படும்.

ஹஜ்ஜிற்கு இரண்டு வகையான மீகாத்துகள் உள்ளன.

1. காலத்தைப் பொறுத்தது
2. இடத்தைப் பொறுத்தது

1. காலத்தைப் பொறுத்தது. அல்லாஹ் கூறுகின்றான்:

الْحَجُّ أَشْهُرٌ مَعْلُومَاتٌ فَمَنْ فَرَضَ فِيهِنَّ الْحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوقَ وَلَا جِدَالَ فِي الْحَجِّ وَمَا تَفْعَلُوا مِنْ خَيْرٍ يَعْلَمْهُ اللهُ وَتَزَوَّدُوا فَإِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوَى وَاتَّقُونِ يَا أُولِي الْأَلْبَابِ

ஹஜ்ஜு (அதற்கெனக்) குறிப்பிட்ட (ஷவ்வால், துல்கஅதா, துல்ஹஜ்ஜு ஆகிய) மாதங்களில்தான். ஆகவே, அவற்றில் எவரேனும் (இஹ்றாம் அணிந்து) ஹஜ்ஜைத் தம்மீது கடமை யாக்கிக் கொண்டால் ஹஜ்ஜு (மாதத்தின் பத்தாம் தேதி) வரையில் தாம்பத்திய உறவு கொள்தல், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சச்சரவு செய்தல் கூடாது. நீங்கள் என்ன நன்மை செய்தபோதி லும் நிச்சயமாக அல்லாஹ் அதனை அறி(ந்து அதற்குரிய கூலி தரு)வான். மேலும், (ஹஜ்ஜுடைய பயணத்திற்கு வேண்டிய) உணவுகளை (முன்னதாகவே) தயார்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால், நிச்சயமாக நீங்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டி யவை அனைத்திலும் மிக உயர்ந்தது அல்லாஹ்வைப் பற்றிய அச்சத்தைத்தான். ஆகவே, அறிவாளிகளே! நீங்கள் (எப்போதும் குறிப்பாக ஹஜ்ஜுடைய காலத்திலும்) எனக்கே பயந்து நடந்துகொள்ளுங்கள். (குர்ஆன் 2:197)

11

அகீகா உடைய சட்டங்கள்

✿

அகீகா என்பது குழந்தைக்காக தந்தை செய்ய வேண்டிய கடமை யாகும். அகீகா என்பது இறைநெருக்கத்தை வேண்டி குழந் தையின் சார்பாக அறுக்கப்படும் பலிப்பிராணியாகும். இது நபி ﷺ அவர்களின் நடைமுறையாகும். ஹஸன் ؓ ஹுசைன் ؓ சார்பாக அகீகா கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்ணியமிக்க நபித்தோழர்களும் இவ்வாறே செய்திருக்கிறார்களும். தாபியீன் களும் இவ்வாறு செய்துள்ளார்கள். அறிஞர்கள் சிலர் இதனை வாஜிப் என்று கூறியுள்ளார்கள். ஹஸன் இப்னு ஸமுரா ؓ அவர்கள் நபி ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:

كُلُّ غُلَامٍ مُرْتَهَنٌ بِعَقِيقَتِهِ

ஒவ்வொரு குழந்தையும் அதனுடைய அகீகாவுக்குப் பிணை யாகும். *(அபூ தாவூது 2837, திர்மிதீ 1522, இர்வாஉ 1165)*

இமாம் அஹ்மது ؒ கூறுகிறார்கள்: தமது பெற்றோருக்குப் பரிந்துரை செய்வதற்கான பிணையாகும் என்பதே இதன் பொருள்.

இப்னுல் கய்யிம் ؒ கூறுகிறார்கள்: அதன் சார்பாக அகீகா கொடுக் கப்பட்டது. அது நல்ல குணத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமாக அமைகிறது.

சரியான கூற்று என்னவெனில் இது வலியுறுத்தப்பட்ட ஸுன்னத் தாகும். அதனுடைய பணத்தை ஸதகா செய்வதைக் காட்டிலும் அத னை அறுப்பதே சிறந்ததாகும். இது அல்லாஹ் வழங்கிய குழந்தை எனும் அருட்கொடைக்கு பெற்றோர்கள் நன்றி செலுத்துவதாக அமையும். இதிலே இறைநெருக்கமும் ஏழைகளுக்கான தர்மமும் இருக்கிறது. ஆண் குழந்தையின் சார்பாக ஒரு வயது அல்லது அதைப் போன்ற வயதுடைய இரண்டு ஆடுகள் அறுக்கப்பட வேண் டும். பெண் குழந்தையின் சார்பாக ஓர் ஆடு அறுக்கப்பட வேண்டும்.